
# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A.,A.Bs.,

வாசகர் அனைவருக்கும்

# 1995

# புத்தாண்டு வாழ்த்துக்கள்

> வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்;
> சங்கீதம் 65:11

இம்மட்டும் இவ்விதழை தொடர்ந்து வெளியிட கர்த்தர் கிருபை செய்தார். அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக!

★ புத்தாண்டில் புதிய தீர்மானம் எடுங்கள்.

★ புதிய ஜீவியத்திற்குள் கடந்து செல்லுங்கள்.

★ கர்த்தர் கொடுக்கிற நன்மைகளைப் பெற்று ஆரோக்கியமடை-யுங்கள்.

★ இவ்விதழ் உங்களுக்குத் தொடர்ந்து கிடைக்க ஜெபம் செய்யுங்கள்.

★ உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் கிறிஸ்துவின் வசனத்தைக் கொடுங்கள்.

கர்த்தர் உங்களைக் காத்து வழிநடத்துவாராக! ஆமென்.

ஆசிரியர்

# WORD OF CHRIST
# கிறிஸ்துவின் வசனம்

பரம் 3 டிசம்பர் 1994. கனி 5

## ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கை
## The Beginning Confidence

RK

ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம்பற்றி கொள்ளாமல் அநேகர் வீழ்ந்து போவதை நாம் அன்றும் இன்றும் பார்க்கமுடிகிறது. காரணம், சோர்வுகள், போராட்டங்கள், தோல்விகள், வியாதிகள், வருத்தங்கள், பணக்கஷ்டங்கள், பிசாசின் சோதனைகள். இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகள் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை குலைத்துப் போட வருகின்றன. இவைகளின் மேல் நாம் இயேசுவின் நாமத்தினால் வெற்றி கொண்ட ஜீவியத்தை செய்ய வேண்டும் நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய் பற்றிக் கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாய் இருப்போம். என்று எபி 3:14ல் வாசிக்கின்றோம். ஞானஸ்நானம் பெறும் போது இருக்கும் விசுவாசம் சில காலத்துக்குப் பின் குறைகிறது. ஒழுங்காக சபைக்கு செல்ல வேண்டும், தினமும் காலை எழுந்தவுடன் கர்த்தரை துதித்து, வேதம் வாசித்து ஜெபிக்க வேண்டும், கற்பனைகளின் படி நடக்க வேண்டுமென ஆரம்பத்திலே தீர்மானித்து விசுவாசிகள் உலகப் பிரகாரமான மக்களைப் பார்த்து ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை விட்டு வழி விலகிப் போகின்றார்கள். இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்படும்போது இருந்த நம்பிககை 40 வருட வனாந்தரத்தில் சோர்ந்து போவதைக் காணமுடிகிறது. மேலும் அவர்களுடைய அவிசுவாசத்தினாலே இரண்டு பேர் மட்டுமே கானானுக்குள் சென்றார்கள்.

நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு. நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ள வேண்டிய கற்பனை இதுவே- 2 யோ:6. இவ்வசனத்தின்படி நாம் கற்பனைகளின்படி நடக்க வேண்டும். ஆதிமுதல் இன்றுவரை பரசங்கிக்கப்படுவதும் இதுவே. இவ்விஷயத்தில் அநேகர் தவறுகிறார்கள். மனதிற்குத் தோன்றுகிறபடி நடப்பது, பிரசங்கிப்பது, வேதத்தில் சொல்லப்படாத கட்டளைகளை உட்புகுத்துவது. போன்ற காரியங்களாலும் ஆரம்ப

விசுவாசம் குறைகிறது. தேவனுடைய சிருஷ்டிப்பின் அன்று முதல் இன்று வரை அனைத்துமே அதனதன் வேலைகளைச் செய்து வருகிறது. ஆனால் மனிதர்கள் மட்டும் ஆதியிலே கொண்டிருந்த அன்பை விட்டு விட்டார்கள். நீ ஆரம்பத்திலே கொண்டிருந்த அன்பை விட்டாயென்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு வெளி 2:4ல் எபேசுக்கு சபைக்கு எச்சரிப்பை தேவன் கொடுக்கிறார்நாமும் ஆரம்ப அன்பை விட்டு விட்டால் ஜீவகிரீடத்தை இழந்து போவோம். நமது பேரையும் ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கிபோடுவார்.

உம்முடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும் உம்முடைய முடிவு சம்பூரணமாயிருக்கும் யோபு 8 : 7 நாங்கள் ஆரம்பத்தில் சபையாக கூடும்போது மூன்று ஆத்துமாக்கள் தான் இருந்தோம். புறஜாதி மக்கள் எங்களை மிக அற்பமாகக் கருதினார்கள். இவர்கள் செத்தால் யார் வருவார்கள், தூக்கிப்போட நாதியில்லை என்றெல்லாம் ஏளனம் செய்தார்கள். கர்த்தர் எங்களைக் கைவிடவில்லை தற்போது அதிகமான ஆத்துமாக்களைக் கொண்ட ஒரு கூட்ட ஜனமாக இருக்கிறோம். நோவா காலத்தில் ஜோடு ஜோடாக மாம்ச ஜந்துக்களெல்லாம்.பேழைக்குள் பிரவேசித்தன இப்போதோ எண்ண முடியாத பறவைகளும், பிரயாணிகளும் இப்பூமியில் வாழ்கின்றன. நம்முடைய ஆரம்ப நம்பிக்கை இப்படியாக இருக்க வேண்டும் அதாவது கிறித்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டேன். ஆயிறும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்போது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்பு கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினலே பிழைத்திருக்கிறேன். கலா2:20 இச்செய்தியை வாசிக்கும் வாசகரே நீங்கள் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கை இன்றுவரை இருக்கிறதா அப்படியில்லையென்றால் இன்றே, ஆரம்ப நம்பிக்கைக்குக் திரும்புங்கள். கர்த்தர் உங்களை வாலாக்காமல் தலையாக்குவார்.

★ சபைச் செய்திகள்:

1) வத்தலக்குண்டு கிறிஸ்து சபைக்கு ஒரு ஞானஸ்நானத்தொட்டி நவம்பர்23ம்தேதி கட்டிமுடிக்கப்பட்டது. 27ம்தேதி ஞாயிற்றுகிழமை மூன்று வாலிபர்கள் சத்தியத்திற்குக் கீழ்படிந்து இத்தொட்டியில் சபை ஊழியர் சகோ. அர்ச்சுனன் அவர்களால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.

| பெயர் | ஊர் | ஊழியர் |
|---|---|---|
| 1. சகோ. கிறிஸ்டிகுமார் | M. வாடிப்பட்டி | சகோ. அர்ச்சுனன் |
| 2. சகோ. மாயவர் | கணவாய்ப்பட்டி | வத்தலக்குண்டு |
| 3. சகோ. சண்முகம் | கணவாய்ப்பட்டி | |

★ நவம்பர் மாத வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. P. தயாளன் | கோவை | 3. எலிசபெத்கலைவாணி | வதிலை |
| 2. M. இராபர்ட் | ,, | 4. A. ஸ்டெல்லா | ,, |

★ சிறுவர் வேத அறிவுப் போட்டியில் வெற்றி சிறுவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. P. கலைவாணி | வதிலை | 11. V. அனிதா | சொக்கலிங்கபுரம் |
| 2. S. கவிதா | ,, | 12. A. பிரேமலதா | T. கள்ளிப்பட்டி |
| 3. M. சித்ராதேவி | ,, | 13. S. ஸ்டீபன் | சத்தியமங்கலம் |
| 4. M. பழனீஸ்வரி | ,, | 14. P. செல்லமணி | கணவாய்ப்பட்டி |
| 5. P. பிரியா | ,, | 15. K. உத்தமன் | ,, |
| 6. S. எஸ்தர்மேரி | ,, | 16. S. மாசிலாமணி | ,, |
| 7. N. ராஜலட்சுமி | ,, | 17. M. வேல்மணி | ,, |
| 8. S. தேன்மொழி | ,, | 18. P. சீலா | G. கல்லுப்பட்டி |
| 9. V முனியம்மாள் | ,, | 19. J. ஜோஸ்பின்ரமணி | ,, |
| 10. P. ஜாஸ்மின் | ,, | 20. ஜெபசீலி | ,, |

★ நவம்பர் மாத இதழின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. தேவனுடையது | சங் 62:11 | 6. ஆம் |
| 2. மரியாள் | லூக் 10:39 | 7. பவுல். சீலா |
| 3. அக்கிரமத்தை | ஏசா 59:4 | 8. இல்லை |
| 4. ஆசகேல் | II சாமு 2:18 | 9. அறிவை |
| 5. பவில் | I தெச 2:8 | 10. பலிபீடத்திற்கு |

★ சிறுவர் வேத அறிவுப் போட்டி விடைகள்

| | | |
|---|---|---|
| 1. கிறிஸ்து இயேசு | I தீமோத் | 1:15 |
| 2. மத்தியஸ்தரும் | ,, | 2:15 |
| 3. கட்டுக்கதைகளுக்கு | ,, | 4:7 |
| 4. எல்லாருக்கும் | ,, | 5:20 |
| 5. அது | ,, | 6:8 |

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் இம்மாதம் 25ம் தேதிக்குள் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புக.

1. சேம் எந்த வயதில் அர்பக்சாத்தைப் பெற்றான்?
2. கூலியை சம்பாதிக்கிறவன் எப்படிபட்ட பையிலே போடுகிறவனாய் அதை சம்பாதிக்கிறான்?
3. தேவனால் எழுப்பப்பட்டவரோ எதைக் காணவில்லை?
4. நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்குச் சுவிகாரப்புத்திரராகும் படி என்ன செய்திருக்கிறார்?
5. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்து கிறது. அந்த நம்பிக்கையினாலே யாரிடத்தில் சேருகிறோம்?
6. முயலானது அசை போடுமா?
7. பூமியில் விளையும் பலன் யாவருக்கும் உரியது என்பது சரியா?
8. ராஜாவை கோபப்படுத்துகிறவன் எதற்கே துரோகம் செய்கிறான்
9. இஸ்ரவேல் வம்சத்தார் சுமந்த நட்சத்திர சொருபத்தின் பெயர் என்ன?
10. 26 முறை 'அவர் கிருபை என்றுமுள்ளது' என்று வரக்கூடிய அதிகாரம் எது?

★ சிறுவர் வேத அறிவுப் பேட்டி
(II தீமோத்தேயு புத்தகத்திலிருந்து)

1. தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக்.....................பலமும், அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.
2. ஒருவன் பல்யுத்தம் பண்ணினாலும் ......................படி பண்ணா விட்டால் முடி சூட்டப்படான்.
3. தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் ...................... மறுதலிக்கிறவர்களாயுமிருப்பார்கள்.
4. ஓட்டத்தை முடித்தேன் ............... காத்துக் கொண்டேன்.
5. நீயோ .................. மனத் தெளிவுள்ளவனாயிரு.

# எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது?

ஜான் பனியன் தனது அற்புதமான காவியமாகிய மோட்சப் பயணத்தில் எப்போதும் கீழேயே பார்த்துக் கொண்டு சென்ற ஒரு மனிதனைப் பற்றிக் கூறுகிறார்.

தூசியும், குப்பையுமான தரையில் முழங்காலில் தவழ்ந்த படியே திரியும் அவன், தனது வாழ்க்கையை வளப்படுத்த ஏதாவது கிடைக்குமா என்று தரையைக் கிளறியபடியே சென்று கொண்டிருந்தான். அவனுக்கு மேலே கைக்கெட்டும் தொலைவில் காணப்பட்ட விலை மதிப்பற்ற, பிரகாசமான கிரீடத்தை அவன் கண்டுகொள்ளவேயில்லை.

'குப்பையைக் கிளறும் அவனது குச்சிக்குப் பதிலாக, உன்னதத்தின் கிரீடத்தை அளிப்பதற்கு ஆயத்தமாக அவனது தலைக்கு மேலே ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவனோ ஒருபோதும் நிமிர்ந்து பார்க்கவேயில்லை! வைக்கோலையும், சிறு குச்சிகளையும், தூசியையுமே அவன் தொடர்ந்து சேகரித்துக் கொண்டிருந்தான்' என்று ஜான் பனியன் எழுதியுள்ளார்.

நாம் பூமியிலுள்ளவைகளை விடுத்து, மேலானவைகளை நாடும்போது (கொலோ 3:2) பரலோக பாக்கியங்களை உணர்கிறோம் என்பதையே ஜான் பனியனின் வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன

கிறிஸ்துவை நமது மீட்பராக ஏற்றுக் கொண்டுள்ள நாம் இந்த உலகத்தில் வாழ வேண்டியிருந்தாலும் உலகப் பொருட்களைப் பற்றிக்கொள்ளக் கூடாது. அழியும் இந்த உலகத்தின் குப்பைகளைக் கிளறும் வாஞ்சையை விடுத்து, நித்திய பலனுக்கான கிரீடத்தை வாஞ்சிப்பதின் மூலம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டும்.

கொலோசெயர் 3:2 வசனத்தின் அடிப்படையில் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பதை நாம் தெரிந்து கொள்ளும் வேளை இதுவே!

இந்த உலகத்தில் வாழ்வதற்கான சிறந்த வழி, உலகத்துக்கு மேலாக வாழ்வதுதான்!

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்**

**கொலோசெயர் 3:2**

MONTHLY MAGAZINE

WORD OF CHRIST Regd No. 84661-92.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 8.30
புதன் மாலை 7.00

கிறிஸ்துவின் சபை
கணவாய்பட்டி ரோடு,
வத்தலக்குண்டு-624202

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது

TO.

PRINTED MATTER

If undelivered please return to:

From

**THE EDITOR**
WORD OF CHRIST
P. Box No. 5
**Batlagundu-624202**
S. India

Edited and published by B. Arjunan M.A., A.Bs., on behalf of church of christ. near water tank, Batlagundu
Printed by C. Pandiyarajan B.Sc, SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202. S India